தொரன்ரன்ஹீத், நியூஹாம், கவுன்சிலோ தைப்பொங்கல் விழாக்கள் பக்.2



மட்டை மோசடியில் பிரித்தானிய – கனடா இளைஞர்கள் பக்.3




கேணல்கருணாவிற்கு 9 மாதங்கள் சிறை – நீதிமன்றத் தீர்ப்பு பக்.6



நீங்களும் ஒருக்கா திங் பண்ணுங்கோ – பேராசிரியர் பெக்கோ பக்.8



மாதம் ஒரு முறை வெளிவரும் இலவச இதழ், ஜனவரி 2008 – பெப்ரவரி 2008, குரல் 22

# லண்டன் குரல்

Voice of London Tamils

# சட்ட நிறுவனத்துள் நுழைந்து முகமூடி அணிந்த இளைஞர்கள் காடைத்தனம்

**வெம்பிளியில் இச்சம்பவத்திற்கு இருவாரத்திற்கு முன் பெரிவெல்லில் உள்ள வீட்டிலும் அத்துமீறல்**

ஜனவரி 16ல் வெம்பிளி ஈலிங் றோட்டில் புதிதாக திறக்கப்பட்ட M N s' Law LLP என்ற நிறுவனத்தினுள் நுழைந்த மூன்று இளைஞர்கள் அங்கு காடைத்தனம் புரிந்ததுடன் அங்கிருந்த அந்நிறுவனத்தின் உரிமையாளரும் சட்டத்தரணியுமான மொகமட் எஸ் ஆர் நிஸ்தாரை தாக்கியும் உள்ளனர். மேலும் இந்நிறுவனம் திறக்கப்பட்ட ஜனவரி 2ம் திகதி பெரிவெல்லில் உள்ள இவர்களது வீட்டினுள் சிலர் அத்துமீறி நுழைந்ததுடன் பொருட்களையும் திருடி உள்ளனர்.

புதுவருடத்துடன் புதிய எதிர்பார்ப்புகளுடன் நிஸ்தார் மொகமட்டும் அவரது துணைவியாரும் இணைந்து M N s' Law LLP என்ற சட்ட நிறுவனத்தை புதிதாக ஆரம்பித்தனர். சம்பவதினம் ஜனவரி 16, 107ஏ ஈலிங் விதியில் உள்ள இந்நிறுவனத்தில் மாலை 6:30 மணியளவில் சட்டத்தரணி நிஸ்தார் கிளைன்ற் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது கண்ணுக்கு கீழ் முகத்தை துணியால் மறைத்துக் கட்டிக் கொண்டு வந்த மூன்று இளைஞர்கள் காடைத்தனத்தில் ஈடுபட்டதாக சட்டத்தரணி நிஸ்தார் லண்டன் குரலுக்குத் தெரிவித்தார்.

வந்தவர்களில் ஒருவர் தொலைபேசியை நிலத்தில் வீசி உடைக்க மற்றவர் கணணியின் மொனிற்றரை உடைக்க மூன்றாமவர் நிஸ்தாரை நோக்கி வந்துள்ளார். சில நொடியில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் அதிர்ச்சியில் இருந்த சட்டத்தரணி நிஸ்தார் எதுவும் செய்ய வேண்டாம் எதையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தது உள்ளார்.

ஆனால் அதற்குக் காது கொடுக்காமல் மொபைல் போனை பறித்துக் கொண்டு நிஸ்தாரைத் தாக்கி காயமேற்படுத்தி உள்ளனர். அங்கிருந்த பொருட்களை உடைத்து நொருக்கி பெரும் கலபரப்படுத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

ஆனால் சம்பவத்தை பார்த்து அவர்களைத் தடுக்க வந்ததும் மீண்டும் அலுவலகத்திற்கு வந்துவிட்டு மீண்டும் மற்றவர்களையும் தாக்கி விட்டு ஓடியுள்ளனர். இவர்களைக் கலைத்துச் சென்ற போது அவர்கள் ஈகிள் றோட்டில் உவன் வே வழியில் எதிர்ப்பக்கமாகத் திருப்பி நிறுத்தப்பட்டு இருந்த கறுப்பு நிற கொல்ப், (2004) காரில் தப்பிச் சென்றதை தான் கண்டதாகவும் காரின் இலக்கம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் சட்டத்தரணி நிஸ்தார் தெரிவித்தார்.



தாக்குதல்களுக்கு உள்ளான சட்டத்தரணி நிஸ்தார் மொகமட்

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் தடயங்களை பெற்றதுடன் மோப்ப நாயையும் பயன்படுத்தினர். இச்சம்பவம் தொடர்பாக ஈலிங் பொலிசாரோடு பெப்ரவரி 5ல் தொடர்பு கொண்ட போது; சிலர் விசாரிக்கப்பட்டதாகவும் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தடயவியல் விசாரணைகளும் இடம்பெறுவதாகவும் அவர்கள் லண்டன் குரலுக்குத் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் வரவில்லை என்று தெரிவிக்கும் சட்டத்தரணி நிஸ்தார், எமது முயற்சியில் பொறாமை கொண்டு எம்மை பயப்படுத்தும் நோக்கத்துடன் யாருடைய தூண்டுதலினாலோ மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றே கருதுவதாக அவர் தெரிவித்தார்.

இந்நிறுவனம் திறக்கப்பட்ட அதே தினம் பெரிவெல் பிளசன்ட்வேயில் உள்ள அவர்களது வீட்டிற்குள் புகுந்து சில நூறு பவுண் மட்டுமே பெறுமதியான பொருட்களை மட்டும் எடுத்துச் சென்று உள்ளனர். பெறுமதியான எதனையும் எடுத்துக் கொள்ளவில்லை. இங்கும் கொள்ளையிடும் நோக்கத்துடன் இது நடைபெற்றதாக நம்ப இயலவில்லை என்கிறார் சட்டத்தரணி நிஸ்தார்.

நேதன்-அமுதன்-சுரேஸ் சட்ட நிறுவனத்தில் சட்டத்தரணி திருமதி சுரேசின் கீழ் பணியாற்றிய திருமதி நிஸ்தார் அவர்களுடன் முரண்பாட்டு வெளியேறி M N s' Law LLP என்ற புதிய நிறுவனத்தை தனது கணவருடன் ஆரம்பித்தார்.

ஜனவரி 16ல் தாக்குதலை நடத்திய இளைஞர்களே ஜனவரி 2ல் வீட்டினுள்ளும் நுழைந்திருக்கலாம் என நிஸ்தார் குடும்பத்தினர் சந்தேகிக்க்கின்றனர். இச் சம்பவங்களால் அக்குடும்பம் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

## நூல் வெளியீடும் ஆய்வும்

சபா நாவலனின் தேசிய இனப் பிரச்சினையில் ஏகாதிபத்தியங்களின் சதி, எஸ் எம் எம் பஸீர் அவரது சகோதரர் எஸ் எம் எம் நஸீர் ஆகியோரின் ஆவதறிவது கவிதைத் தொகுதி ஆகிய இரு நூல்களின் வெளியீடும் ஆய்வும் பெப்ரவரி 9ல் சேர்பிற்றன் நூலக மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

காலம்: 09 பெப்ரவரி 08 சனிக்கிழமை

நேரம் : மாலை 3:30 மணி முதல் மாலை 7:30 மணி

Surbiton Library Hall, Ewell Road, Surbiton, Surrey, KT6 6AG

(The Hall is on the upper floor of the building next to the main library.)

## லண்டன் தலித் மாநாடு

பெப்ரவரி 16ம் 17ம் திகதிகளில் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் தலித் மாநாடு லண்டனில் இடம்பெற உள்ளது. இதில் இலங்கையில், இந்தியாவில் இருந்து சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக செயற்படும் செயற்பாட்டாளர்கள் கல்வியியலாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

16th Feb 2008 - 10:00 - 17:00

17th Feb 2008 - 15:00 - 20:00

Quackers House Bush Road, Wanstead, London, E11 3AU (Nearest Tube: Leytonstone - Central Line (5 min walk) Buses : 257, W19, 145, 66 (Greenman Roundabout)

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிலங்கையில் 4 குண்டு வெடிப்புகள் 13 பேர் பலி 20 பேருக்கு காயம்

இலங்கையின் 60வது சுதந்திரதினமான பெப்ரவரி 04 இடம்பெற்ற நான்கு குண்டு வெடிப்புகளில் 13 பேர் கொல்லப்பட்டு உள்ளனர். 20 பேர் காயமடைந்து உள்ளனர். வடகிழக்கு இலங்கையின் பொலநறுவை மாவட்டத்தில் வெலிஓயா ஜனகபுர பகுதியிலே பொது மக்கள் பயணம் செய்த பஸ் வண்டிக்கு இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே பெரும்பாலானவர்கள் கொல்லப்பட்டு உள்ளனர். இச்சம்பவத்தில் மட்டும் 12 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 17 பேர் காயபப்பட்டும் உள்ளனர்.

கொழும்பு கல்கிசையில் ரான்ஸ்போமர் ஒன்றுக்கு வைக்கப்பட்ட குண்டு வெடிப்பினால் நான்கு வீடுகள் சேதமடைந்து உள்ளது. மொரட்டுவவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பாதிப்பு ஏதுவும் ஏற்படவில்லை. புத்தல பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டு உள்ளார் மூவர் காயமடைந்துள்ளனர்.

இதற்கிடையே தென்னிலங்கை மக்களைப் போல வட இலங்கை மக்களும் சுதந்திரக்காற்றை நுகரும்நாள் வெகு விரைவில் வரும் என ஜனாதிபதி ராஜபக்ச சுதந்திரதின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்து உள்ளார்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலை தாக்குதலில் சிந்தப்பட்ட இரத்தம் காயு முன்னரே அடுத்த 24 மணிநேரத்திற்குள் இத்தாக்குதல் இடம்பெற்று உள்ளது. இத்தாக்குதலில் 14 பொதுமக்கள் கொல்லப்பட்டு 100 பேர் காயமடைந்தனர்.

வி.புலிகள் சிங்கள மக்களை இலக்கு வைத்து அங்கும்இங்கும் பல தாக்குதலை நடத்தி இருந்தனர். ஆனால் நவம்பர் 27 மாவீரர் தினத்திற்குப் பின் குறுகிய காலத்திற்குள் சிங்கள பொதுமக்கள் மீது பல தாக்குதல்களை நடத்தி உள்ளனர். இது வி புலிகளின் இராணுவ பலவீனத்தை வெளிப்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

குரல் 22, பெப்ரவரி 2008

# லண்டன் குரல்

ஆசிரியர்: ஆசிரியர்குழு
த ஜெயபாலன் Dr பி சிவக்குமார்
நிர்வாகம்: ஆர் சுரேஸ்குமார்
ரி கொன்ஸ்ரன்ரைன் ஜோ ஜெயவேந்தன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 020 8905 0452

'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

## தைப்பொங்கல் விழாக்கள்

ஜனவரி 26ல் ஹவுன்சிலோ தமிழ் சமூகம் மையம் ஏற்பாடு செய்த பூமாலை 2008 நிகழ்வு வேரற்றமான்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. உழவர் திருநாளான தைப்பொங்கலையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு அன்றைய மாலையை பொன் மாலைப் பொழுதாக்கியது.

தைப்பொங்கல் தினமான ஜனவரி 14ல் எட்டாவது வருடமாக இவ்வருடமும் நியூகாமில் உதவி மேயர் தெருவிளக்குகளை ஏற்றி சிறப்பித்தார். அனைத்து மதத்தவர்களும் கலந்து கொண்ட இவ்விழாவை நியூகாமில் உள்ள தமிழ் சமூக ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. ஹைஸ்றிற் நோத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

தொரன்ரன்ஹீத் தமிழ் சங்கம் வழமைபோல் தைப்பொங்கல் விழாவை வெகுசிறப்பாகக் கொண்டாடியது. ஜன 12ல் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். ரொறன்ரன்ஹீத் தமிழ் சங்கத்தின் இளையோரின் தலைமையில் இலங்கை இந்திய தமிழர்கள் கூட்டாக இவ்விழாவை நடத்துவது அதன் சிறப்பம்சமாகும்.

## பிரித்தானிய தடுப்பு முகாமில் இளைஞர் தற்கொலை




லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தை ஒட்டிய ஹாமன்ஸ்வேர்த் அகதிகள் தடுப்பு முகாமில் தமிழ் இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்து உள்ளார். திருகோணமலை மூதூர் பகுதியைச் சேர்ந்த எட்டு வயதுக் குழந்தையின் தந்தையான சத்தியசீலன் சிவபாலன் (30) என்பவரே ஜனவரி 20, 2008ல் தற்கொலை செய்து கொண்டதாக தெரியவந்து உள்ளது.

இது தொடர்பாக இறந்த வருடைய மைத்துனருடன் தொடர்பு கொண்ட போது, பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டு இருந்த சத்தியசீலன் சிவபாலன் ஜனவரி 17, 2008ல் முகவர் ஒருவர் ஊடாக கனடா செல்ல முயன்ற போது விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்தார். இவருடன் மேலும் இரு தமிழ் இளைஞர்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட சத்தியசீலன் சிவபாலன் ஹார்மன்ஸ் வேர்த் முகாமில் இருந்து தன்னுடைய நண்பர் திவாகர் என்பவருடன் தொடர்புகொண்டு தனது சகோதரிக்கு தகவல் கொடுத்த உள்ளார். மறுநாள் லூசியத்தில் உள்ள அவரது சகோதரி தொடர்பு அவருடன் தொடர்பு கொண்டு உள்ளார். அவர் மரணமடைவதற்கு முதல்நாள் ஜனவரி 19 அன்று தன்னை பாரக்க வரும்படி நண்பர் திவாகரை அழைத்து உள்ளார். அவரும் ஜனவரி 21 திங்கட் கிழமை அவரைக் பார்க்கச் செல்வதற்கு ஒழுங்கு செய்திருந்தார்.

இதற்கிடையே, ஞாயிறு சத்தியசீலன் சிவபாலன் தடுப்பு முகாமில் இருந்த கழிவறையில் இருந்து உயிரற்ற உடலாக மீட்கப்பட்டு உள்ளார். அவர் தொடர்பு கொண்ட இலக்கத்தை தேடிப்பிடித்து திவாகரனைத் தொடர்பு கொண்ட அலுவலர்கள் சகோதரியின் தொலைபேசி இலக்கத்தைப் பெற்று அவர்களிடம் சென்று அவர் மரணமடைந்த செய்தியைத் தெரிவித்து உள்ளனர். அவர்கள் சத்தியசீலன் சிவபாலன் தற்கொலை செய்து கொண்டதாக சகோதரிக்கு தெரியப்படுத்தி உள்ளனர்.

முதலில் அவர் கழிவறையில் தூக்கு மாட்டி இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் பின்னர் அவர் துணியால் தனது கழுத்தை நெரித்து தற்கொலை செய்து கொண்டதாகவும் ஹார்மன்ஸ்வேர்த் அதிகாரிகள் கூறியதாக சந்திரன் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து பிரான்ஸ் வந்து அங்கிருந்து 2003ல் லண்டன் வந்த சத்தியசீலன் 2005ல் பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தார். தஞ்சம் நிராகரிக்கப்பட்ட பல்லாயிரம் தமிழர்களில் இவரும் ஒருவரானார். இவரது குடும்ப வாழ்க்கை முறிவடைந்த நிலையில் இவரது குழந்தையை குழந்தையின் மாமன் ஆன சந்திரனே பராமரித்து வருகிறார். மிகவும் இளம் வயதுடைய சத்தியசீலன் சிவபாலன் தற்கொலை செய்ததற்கு எந்தக் காரணமும் இருப்பதாகத் தனக்குத் தெரியவில்லை என சந்திரன் தெரிவித்தார்.

தனது குழந்தையில் அன்புகாட்டிய அந்த இளம் தந்தை தன்னையும் தனது குழந்தையினதும் எதிர்காலத்தைக் கருத்தில் எடுத்தே கனடா செல்ல முயற்சித்ததாகவும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் இந்த மரணத்தை தற்கொலையாகப் பார்க்க முடியாது உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

சிவபாலன் சத்தியசீலனுடைய இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டு அவரது இறுதிக் கிரியைகள் இலங்கையில் இடம்பெற்றது.

## மகளின் திருமணத்தில் வரதரைக் கொல்லச் சதி தமிழ்நாடு காவல்துறை



வரதராஜப் பெருமாளின் மகளின் திருமண நிகழ்வில் வரதராஜப் பெருமாளைக் கொலை செய்ய விடுதலைப் புலிகள் திட்டமிட்டதாக தமிழ்நாடு காவல்துறையினர் இன்று (ஜனவரி 28) தெரிவித்து உள்ளனர். 20 ஆண்டுகளுக்கு முன்னர் கையெழுத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் வடகிழக்கின் முதலமைச்சராக ஈபிஆர்எல்எப் தலைவர் வரதராஜப் பெருமாள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. தமிழ்நாடு மடிப்பாக்கம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட தம்பித்துரை பரமேஸ்வரன் என்பவரை தீவிர விசாரணைக்கு உட்படுத்தியபோதே இந்தத் திட்டம் அம்பலமானதாக தமிழ்நாடு காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

பெப்ரவரியில் ராஜஸ்தானில் நடைபெறவிருக்கும் வரதராஜப் பெருமாளின் திருமணத்தின் போதே அவரைக் கொல்ல இவர்கள் திட்டமிட்டு உள்ளனர் என காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். திருமணத்திற்கு யார் யாரெல்லாம் அழைக்கப்படுவார்கள் என்பதனை ஆராய்ந்து தாங்களும் அழைக்கப்பட்டவர்களாக சென்று கொலைத் திட்டத்தை நிறைவேற்ற தயாரானதாக தம்பித்துரை பரமேஸ்வரன் விசாரணையை மேற்கொண்ட அதிகாரியிடம் கூறியதாக காவல்துறையினரின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த கால அனுபவங்களில் இருந்து விடுதலைப் புலிகள் எதனையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதனையே இந்த சதித்திட்டம் தெளிவாகக் காட்டுவதாக விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரி தெரிவித்து உள்ளார்.

வரதராஜப் பெருமாள் ராஜஸ்தானில் ஒரிசா என்ற இடத்தில் இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டு உள்ளார்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டை மோசடியில் பிரித்தானிய - கனடா இளைஞர்கள் மாட்டினர்

கனடாவில் கிறடிட்காட் மோசடியில் கைது செய்யப்பட்ட நால்வரின் பிணை தொடர்பான வழக்கு பெப்ரவரி 1ல் விசாரணைக்கு வருகிறது. சிக்னலில் நிற்காத வாகனத்தை துரத்திப் பிடித்த பொலிசார் அதிலிருந்தவர்களை விசாரித்ததில் கிறடிட் காட் மோசடி அம்பலமாகி உள்ளது. ஜனவரி 28ல் ஸ்காபொறோவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வாடகைக்கு எடுக்கப்பட்டு இருந்த அக்காரில் இருந்து பிரித்தானிய வங்கிக் கணக்காளர்களின் தகவல்ககள் கொண்ட வங்கி அட்டைகளைக் கைப்பற்றினர். மேலும் அதிலிருந்த நால்வர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்களில் கிருபாகரன் செல்வநாயகம்பிள்ளை (38), சேதுகாவலர் சரவணபவன் ஆகிய இருவரும் பிரித்தானிய தமிழர்கள். பிரதீபன் தம்பு (22) லோஜானந் சிறிநந்தன் (27) ஆகிய இருவரும் கனடாவில் வாழ்பவர்கள். இவர்கள் மீது ஒன்றுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகளை ஸ்காபொறொ பொலிசார் பதிவு செய்துள்ளனர்.

இவர்களில் கிருபாகரன் செல்வநாயகம் பிள்ளை (38) காரைநகரைச் சேர்ந்தவர். லண்டனில் மிகவும் அறியப்பட்ட வர்த்தகர். சிறிது காலத்திற்கு முன் இவர்

கார் சிக்னலில் நிறுத்தப்படாததால் சோதணையிடப்பட்ட போது காரில் இருந்து 42 பிரித்தானிய வங்கி அட்டைகள் கைப்பற்றப்பட்டது. மேலும் அவர்கள் தங்கியிருந்த பிறம்ரன் ஹொட்டலையும் ஸ்காபொறொ எல்ஸ்மியா வீதியில் உள்ள வீட்டையும் சோதணை இட்டதில் மேலும் டசின் காட்கள் கைப்பற்றப்பட்டு உள்ளது. இவர்கள் இரு லப்ரொப் கொம்பியூட்டர்கள், பின்ஹோல் கமரா என்பனவற்றை தமது மோசடிக்கு பயன்படுத்தி உள்ளனர். இவையும் கைப்பற்றப்பட்டு உள்ளது.

பிரித்தானிய வங்கிக் கணக்குகளில் இருந்து பல பத்து ஆயிரக்கணக்கான பவுண்களை சர்வதேச வலைப் பின்னலூடாக கொள்ளையிட இவர்கள் முயன்றதாக பொலிசார் குற்றம்சாட்டுகின்றனர். இந்த மோசடி விசாரணைகளை மேற்கொண்டுள்ள புலனாய்வு அதிகாரி ஸ்கொட் விற்மோர் ஸ்காபொறொவில் உள்ள இரு வீடுகளை தாங்கள் சோதணையிட்டதாகவும் அங்கிருந்து விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் சுவரொட்டிகள் கலண்டர்களை கண்டெடுத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏதாவது தொடர்பு உள்ளதா என்பதை தாம் விசாரித்து வருவதாகத் தெரிவித்து உள்ள புலனாய்வு அதிகாரி ஸ்கொட் விற்மோர், இவ்வாறான தொடர்புகளை நிருபிப்பது மிகவும் கடினமானது என்றும் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் விடுதலைப் புலிகள் இதனூடாக பயனடைவார்களாக

Toronto Police Service
To Serve and Protect

இருந்தால் இது முதற் தடவையல்ல என்றும் கூறினார்.

அண்மைய வருடங்களில் சர்வதேச கிறடிட்காட் மோசடிகளில் பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, தாய்லாந்து, இலங்கை, இந்தியா என பல நாடுகளிலும் இலங்கைத் தமிழர்கள் கிறடிட் காட் மோசடியில் சிக்கும் போது அவர்களை விடுதலைப் புலிகளாகவே பொலிசார் காண்பிக்கின்றனர். சில சமயம் கைது செய்யப்பட்டவர்கள் தங்கள் குற்றத்தை நியாயப்படுத்த தாங்கள் விடுதலைப் போராட்டத்திற்காக இதில் ஈடுபடுவதாக தெரிவித்த சம்பவங்களும் உண்டு.

ஆனால் விடுதலைப் புலிகளுக்கும் கிறடிட்காட் மோசடிக்கும் தொடர்பு இருப்பது சட்டப்படி எங்கும் நிரூபிக்கப்பட்டு இருக்கவில்லை. அவை ஊகங்களாகவே உலாவருகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பணத்தை மோசடி செய்தனர் என்பது இன்னமும் தெளிவில்லாமல் இருப்பதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். இவர்களுக்கு பிணை வழங்கப்படும் பட்சத்தில் இரு பிரித்தானியத் தமிழர்களும் பிரித்தானியாவிற்கு வர அனுமதிக்கப்படுவார்களா என்பது பிணை விசாரணையில் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.





To get tune, contact your satellite installer, or contact us at this number 0033148353518

SATELITE DETAILS

| ASIA | EUROPE |
|---|---|
| SATELITE: YAMAL 49* East | SATELITE: Eutelsat 9* East |
| FREQ: 3958 | FREQ: 11842 H |
| S/R: 4124 | S/R: 27500 |
| FEC:3/4 | FEC:3/4 |


# சுதந்திர இலங்கையின் 60 ஆண்டுகள்

தேசம்நெற்றில் பதிவிடப்பட்ட ரதனின் கருத்து



சுதந்திர இலங்கை???!!! குரங்கின் கை பூமாலை! 1952 ல் மலையக தமிழரின் குடியுரிமை பறிப்பு! 1956ல் சிங்கள மட்டும் சட்டம். 1957ல் பண்டா செல்வா ஒப்பந்தம். ஒரு தலைபட்சமாக பண்டாவலாயே ஒப்பந்த கிழிப்பு. அதேயாண்டு தமிழருக்கெதிரான இன அழிப்பு. அதை தொடர்ந்து இனவாத புத்தபிக்குவால் பண்டா அரசியல் படுகொலை. திட்டமிட்ட சிங்கள குடியேற்றம். முதல் பத்து வருட கோணல் 60 ஆணடுகள் வரை முற்றும் கோணலாக தொடர்கிறது.

சுதந்திர இலங்கையின் ஆரம்பமே தமிழையும் தமிழைரையும் திட்டமிட்டு அழிக்கவும் அடக்கவும் தனது அரசியல் நிகழ்சி நிரலை சிங்கள அரசு தயார் செய்ததென்பது நிதர்சனமானது. இதனை உணர்ந்த தமிழ் தலைமை தமது இனத்தை பாதுகாக்க சாத்வீக வழியில் சமட்சி சுயாட்சியென கோரிக்கையை முன்வைக்க நிர்பந்திக்கபட்டது. இவை ஆயுதபலம் கொண்டும் ஏமாற்றுதனமான ஒப்பந்தங்களும் கிழிதெறிப்புக்கள் மூலம் அடக்கபட்டது. அமைதி வழி ஆயுதத்தின் முன் தோற்றதால் தமிழரும் நியாயமான அரசியல் அபிலாசைகளை அடைவதற்கு ஆயுதம் தூக்க நிர்பந்திக்கபட்டனர். ஒற்றுமையாய் வாழலாமென நம்பிய தமிழ் அரசியல் தலைமைகள் சிங்களவரால் நயவஞ்சக முறையில் ஏமாற்றபட்ட கசப்பான அனுபவத்தால் சுதந்திரம்? பெற்ற 30 ஆண்டுகளிற்கு உள்ளேயே தனிநாடக பிரிந்துபோக ஏகமனதாக முடிவெடுத்தனர் 1977ல்.

பிரிதானியா இலங்கையை விட்டு வெளியேறிய போது ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த நிலையில் கல்வி பொருளாதார வளர்சியில் இருந்த இலங்கை சுதந்திரத்தின் பின் தமிழரை பொறுத்த மட்டில் கண்ணீர்துளி தீவாகவும் பாலியல் அவாகொண்ட உல்லாச பயணிகளுக்கு இனிமையான மாங்கனி தீவாகவும் இருக்கிறது.


1952 இந்தியா நோக்கி அகதி தமிழனாக புலம்பெயர தொடங்கிய தமிழன் 1983 லிருந்து மேற்கு நோக்கியும் அகதியாக அலைய நிர்பந்திக்கபட்டுள்ளான். இன அழிப்பில் உயிரைவிட்ட தமிழனின் தொகை இலட்சத்தை தாண்டுகிறது. நீர்கொழும்பு சிலாபம் புத்தள பிரதேசங்களிலிருந்த தமிழன் திட்டமிட்ட சிங்கள கல்வி நடவடிக்கை மூலம் சிங்களத்தை தாய் மொழியாக கொள்ள நிர்பந்திக்கபட்டு சிங்களவராக மாற்றபட்டள்ளான். கடந்த 30 வருட தமிழர் அழிவை சொல்ல தேவையில்லை அது இன்று வரை தொடர்கிறது. இதுவே 60 வருட சுதந்திரம் தமிழருக்கு தந்த பரிசு.


இலங்கையின் மகளிரும் ஆடவரும் உள்ளூரில் பிழைக்க முடியாது அராபிய மண்ணில் மனித சுதந்திரம் மறுக்கபட்ட நவீன அடிமைகளாக அல்லல்பட்டு உழைக்க அந்த வரிபணத்தை அழிவுக் கான போருக்கு முதலீடு செய்கிறது சிங்கள அரசு.


இலங்கை மக்களிற்கு சுதந்திரம் ஒன்றும் கிடைக்கவில்லை அடக்கியாளும் எஜமானர் மாற்றமே நடந்துள்ளது. சட்டியில் கிடந்தவர்களை போலி சுதந்திரம் பெயரால் நெருப்பினுள் போட்டுள்ளனர். அதுதான் இலங்கையர் அனுபவிக்கும் அந்தரம்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# a day trip with reindeer



*There was a boy who lived down the lane and his name is Varnan. He ride on animals far, far away from here. He knew what happened when he ride on them. He had a friend called Karnan and they work together. Each of them have their own reindeers. They always go out for fun.*



*One day they rod on their reindeers to get to moutain cliff. They trained the reindeers to have a long jump to the other end of the cliff. They went back little bit and they start running to the edge of the cliff and had a scary high jump. They tried several time.Now they did it.*

*They jumped and they landed other end of the cliff. Then they ran to a mountain but suddenly, "Reindeer" Karnan shouted. Varnan carried on running. "Wait for me" Karnan shouted again, and Varnan went back to Karnan.*

*"What's wrong with your reindeer?" asked Varnan. "He was tired," said Karnan. "Let's give him some food to eat so he will be better," said Varnan. So the boys went to picked some grass to their reindeers. While they went to pick some grass their reindeers were sleeping.*

*After they fed the reindeer, Karnan's reinder was much better.*

*Now they got back their reindeers and got ready. They twist their ropes and ran as fast as they could to get to the mountain and had so much fun.*



*Karnan Jeyabalan (8yrs)*
*Year 3_Cann Hall Primary School*

**இந்த இதழில் இருந்து லண்டன் குரலில் சிறுவர் பகுதியும் சேர்க்கப்பட்டு உள்ளது. சிறார்கள் தங்கள் ஆக்கங்களையும் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.**

**நீங்கள் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி**

London kural, P O Box 35806, E11 3JX London

e.mail: thesam97@hotmail.com


## இலண்டன் தமிழ் கல்வியகம்
## London Tamil Academy

நன்றே செய்க அதை இன்றே செய்க
தாயும் தம் மொழியும் தரணியில் பெரிதாம்

UK பல்கலைக்கழக அனுமதி நேர்முகத் தேர்வின் போது தமிழர்கள் தமிழ் மொழியில் GCSE க்கு குறையாத தரத்தில் OCR தமிழ் மொழி தராதரப் பத்திரம் பெற்றிருந்தால் மேலதிக மதிப்பெண்கள் பெற அரிய வாய்ப்பு.

7 வயது முதல் எல்லா வயதினர்க்கும் தமிழில் OCR தராதரப் பத்திர பரீட்சைக்கான பாடங்களும் பயிற்களும் நடைபெறுகிறது.

மற்றும் தமிழ் கலை பண்பாட்டுக் கற்கை நெறிகள், UK சாரதிகள் எழுத்துப் பரீட்சை பயிற்சி, UK யில் குடி உரிமை பெறுவதற்கான

ஆங்கில மொழி பரீட்சை பயிற்சி KS1, 2 & 3 ஆயவாள வினாவிடை வகுப்புகளும் இடம்பெறுகின்றன.

அனுமதிகள் வரையறுகப்பட்டவை

LTA-UK, 81 Knollmead, Surrey, KT5 9QR, UK
Tel:+44(0)208 3303424 / Fax:+44(0)2083303424
E-Mail: londontamilacademy@talktalk.net

UKயில் 21 Asset Languages ல் தமிழும் ஒன்றாக 2005 முதல் சேர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரும் சாதிய முரண்பாடும்



புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்களிடையேயுள்ள சாதிப்பிரச்சனை ஒரு தற்காலிகமானதே. சாதியம், தலித்துவம் பற்றி அக்கறையுடையவர்கள் தொடர்ச்சியாக செயற்படுவதன் மூலமே காலப்போக்கில் இந்த சாதிப் பிரச்சனை இல்லாது ஒழிக்கப்பட முடியும்.

புலம்பெயர் நாடுகளில் பிறந்து வளரும் இளைய தலைமுறையினர் தமது மொழி, தமது நாடு, தமது பெற்றோரின் ஊர் கிராம அடையாளங்களை அறிய முற்படுவது அவர்களின் இயல்பான சுபாவமாகும். பெற்றோர்களும், ஊரவர்களும் இதை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி தாம் தம் வாழ்வில் கடைப்பிடித்து வந்த பிற்போக்குத்தனங்களை, சாதிய வேறுபாடுகளை இளம் சந்ததியினர் மீது திணிக்கின்றனர். இது எமது பாரம்பரியம் என்றும், எமது கலாச்சாரம் என்ற போர்வையிலும் அறிமுகப் படுத்தப்படுகின்றது. இப்படி ஆரம்பமாகும் சாதிய அறிமுகம் அவர்களின் குடும்பம், உறவினர்கள், நண்பர்கள் என்று தொடங்கி அவை ஊர்ச்சங்கங்கள், பொது அமைப்புகள் என்பவற்றினூடாக வளர்க்கப்படுகிறது.

இப்படி வேரூன்றப்படுகின்ற சாதிய செயற்பாடுகளின் பிரதிவிளைவுகளை எம்மால் நாம் வாழும் பிரான்ஸ், ஜேர்மன், சுவிஸ், லண்டன், கனடா போன்ற நாடுகளில் அவதானிக்க கூடியதாக உள்ளது. ஐரோப்பாவிலுள்ள தமிழ் பொது அமைப்புக்களின் செயற்பாடுகளில் உயர் - தாழ் நிலைமைகளை, சாதிய வேறுபாடுகள் கடைப்பிடிப்பதை நேரடியாக காணக்கூடியதாக உள்ளது இவற்றிக்கு எதிராக குரல்கள் எழுப்பப்படுவதையும் நாம் அறிகிறோம்.

இப்படியான ஒரு சம்பவமே லண்டன் காரை நலன்புரிச்சங்க நிர்வாகக் கூட்டத்தில் நடைபெற்றதும் அது லண்டன் பத்திரிகைகளில் வெளிக்கொணர்ந்து கண்டிக்கப்பட்டதுமாகும். (அச்சம்பவமா னது காரை நலன் புரிச்சங்க நிர்வாகக் கூட்டத்தில் காரைநகரின் பாலாவோடை பகுதிக்கான பிரதிநிதி ஒருவரை தெரிவு செய்ய நடராசா என்பவர் ஒரு சமூக சேவையாளன் பெயரை முன்மொழிந்தார் சங்க உப தலைவர் கோணேசலிங்கம் முன்மொழியப்பட்ட சமூக சேவையாளனை அவரின் சாதி காரணமாக நிராகரித்தார் - அத்துடன் ஒரு தலித்தை தமது சங்கத்தினுள் உள்வாங்குவதை ஆக்ரோசமாக எதிர்த்தார்) அந்த அமைப்பிலுள்ள இதர நிர்வாக உறுப்பினர்கள் வாய்மூடி இருந்தமையும், அந்த அமைப்பு இதனை கண்டிக்க தவறியதும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

காரை நலனபுரிச் சங்கம் தற்போது தனது பெயரை பிரித்தானியா காரை அபிவிருத்திச் சபை KARAI INTERNATIONAL DEVELOPMENT ASSOCIATION என்று பெயர் மாற்றம் செய்வதற்கான முயற்ச்சிகளில் ஈடுபட்டு உள்ளார்கள்.

கடந்த காலங்களில் இவர்களின் நிர்வாக சீர்கேடுகள், நிர்வாகத்தினுள் சாதியப்பாகுபாடு காட்டுதல் போன்ற கேவலமான நடத்தைகள், ஐரோப்பாவில் (லண்டன், பிரான்ஸ், கனடா) வெளிவரும் பல பத்திரிகைகளில் வெளிகொணரப்பட்டு உள்ளது, இத்தவறுகள் எவற்றிற்கும் எப்பத்திரிகைகளுக்கும் இவர்கள் பதிலளிக்க வில்லை மாறாக அமைப்பின் பெயரை மாற்றியமைப்பதன் மூலம் தமது கேவலத்தை முடிமறைக்கும் எத்தனிப்பில் இறங்கி உள்ளார்கள் இந்த காரை நலன்புரிச் சங்கம். கடந்த காலங்களில் வெள்ளாளர் நலன்புரிச் சங்கம் எனவும் காரை மக்களை தலைகுனிய வைக்கும் சங்கம் எனவும் விமர்சிக்கப்பட்டு இருந்தது யாவரும் அறிந்ததே!!

தன்னை வெள்ளாளன் அல்லது உயர்சாதி என்று இனம் காட்டிக் கொள்ளும் ஒருவர் தான் பெருமை கொள்ளும் வெள்ளாளர் எனற பதம் பற்றிய ஆய்வு செய்திருப்பாரேயானால் மேற்குறிப்பிட்ட நிகழ்வு நடைபெற்றிராது.

இலங்கையில் யாழ்பாணத்திலும் மட்டக்களப்பிலும் உள்ள மோசமான சாதிய சிந்தனைப் போக்கு, வரலாறு என்பது கிட்டத்தட்ட 350 வருடங்களுக்கு உட்பட்டது. இன்றைய வெள்ளாளர் எனப்படுவோர் சாண்டார், வெள்ளாளர், வடுகர், நாடார், மடப்பள்ளி, மள்ளர் (பின்னர் பள்ளர் ஆக்கப்பட்டது), குகன், கள்ளர், பழையர், பறையர், மறவர், தவசிகள், அகம்படியார், செங்குந்தார், சிவியர், கோவியர் ஆகிய சாதிகளின் கூட்டணியினரேயாகும். மேற்குறிப்பிட்ட இப் பிரிவினர் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஐரோப்பிய காலனித்துவத்திற்கு எதிராகவும் கிறீஸ்தவத்திற்கு எதிராகவும் வெள்ளாளர் என்ற கூட்டணிப் பெயரில் செயற்பட்டார்கள். (வெள்ளாளர் என்ற சாதிப்பிரிவினர் ஆரம்பகாலத்தில் இருந்து வந்த ஒரு சாதியுமாகும். ஆனால் ஏன் இந்தப் பெயரில் கூட்டணி உருவாக்கப்பட்டது என்பது தெரியாததாகும், சிலவேளை இந்த கூட்டணியை உருவாக்க முன்னின்றவர்கள் அந்த குறிப்பிட்ட வெள்ளாராக இருந்திருக்கலாம்) இக் கூட்டணியை பல சைவ சமய, கிராமிய தலைவர்கள் முன்னின்று உருவாக்கினர்.

இந்த வெள்ளாளர் கூட்டணியில் சேராமல் ஒரு பகுதியினர் தாம் தமது சொந்த சாதியின் பெயரில் தனித்து நின்று ஐரோப்பிய கிறீஸ்தவத்திற்கு எதிராக போராடினார்கள், வெள்ளாளர் கூட்டணியை அங்கீகரிக்காமல், தாம் தத்தமது சாதியினராக சில பிரிவினர்கள் இருந்ததும் குறிப்பிடத்தக்கது இப்படி யானவர்களில் மள்ளர், குகன் மற்றும் பறையர்களும் அடங்குவர்.

காரைநகரில் இருந்த அரசர் தமது அறிவித்தலை பறை சாற்றுவதற்கு இந்த பழங்குடியினரை பாவித்தனர் அவர்கள் ஆதியிலிருந்து பாவித்த பாரம்பரிய இசைக் கருவியான பறை மேளத்தை உபயோகித்து அரசரின் கட்டளைகளை மக்களுக்கு பறைசாற்றினர். இதனை தொழிலாக கொண்டவர்கள் - பறையர் என அழைக்கப்பட்டோர் - ஆதிச் சைவர்கள் ஆவார். இந்த குலத்தவரிடையே பல சைவ சித்தர்களும் ஞானிகளும் இருந்துள்ளனர். இவர்கள் சிவன்(நடராசர்) ஐயனார், காளி (சூலம்) போன்ற தெய்வங்களை வழிபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்களுடன் கூடவே தற்போது காரைநகரில் உள்ள முக்கியர் அல்லது குகன் குலத்தவர்கள், எனப்படுவோர் (தற்போது மீன் பிடித்தலை தொழிலாக கொண்டவர்கள் - இவர்களை பட்டங் கட்டிகள் என்றும் கூறுவர்) ஆதிச்சைவ குலத்தவர்களே. இந்த குகன், பறையர் குலத்தவர்களிடையே பல மாமிசம் சாப்பிடாத சைவ ஆசாரக் குடும்பத்தினர் இன்றும் இருப்பது இதற்கு முக்கிய சான்றாகும்.காலப்போக்கில் ஆதிச் சைவம் இந்து சமயத்தால் உள்வாங்கப்பட்ட போது இந்த ஆதிச் சைவர்களின் சைவத்தின் மீதான ஆதிக்கம் இல்லாது போக, மீன்பிடித்தலை தொழிலாக ஆரம்பித்தனர் பின்னர் இத்தொழில் அவர்களது முக்கிய வருமானத்திற்கான தொழிலாகியது.

முன் சொன்ன வெள்ளாளர் கூட்டணியில் இருந்த குகன் குலத்தவர்களுக்கும், அந்த வெள்ளாளர் கூட்டணியில் சேராத குகன் குலத்தவர்களுக்கும் இடையே திருமண உறவுகள் நடைபெற்றும் இருந்தன. இந்த திருமண உறவுகளினால் வந்த பரம்பரையினர் இரு சமூகங்களிலும் இருப்பதனாலேயே காரைநகர் மணற்காட்டு முத்துமாரியம்மன் கோவில் பங்காளிகளாக இருபகுதியினரும் இருந்தனர் இந்த பங்குப்பிரச்சனை சர்ச்சைக்குள்ளாகி இரு நூறு வருடங்களாகியும் தீர்கக்ப்படாமல் உள்ளது, அவர்களது பரம்பரையினரே 1925ம் ஆண்டு புரட்டாதி மாதம் 29ம் திகதி நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர். (வழக்கு இலக்கம் 19121) இந்த வழக்கு இன்றுவரை தீர்க்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்றும் இந்த மணற்காடு அம்மன் கோவிலில் இந்த குகன் குலத்தோர் திருவிழா செய்வதும் வேள்வி நடாத்தும் போது மரியாதை பெறுவதும் வழக்கமாக உள்ளது. மேற்குறிப்பிட்ட பிரச்சனைகள் தீர்வு காணப்படாததின் காரணமாக காரைநகர் வடக்கில் சிவகாமி அம்மன் என்ற கோவிலை குகன் குலத்தோர் தமக்கென ஆரம்பித்ததையும் இங்கு குறிப்பிடலாம்.

தற்போது காரைநகரில் உள்ள எல்லா சாதிப் பிரிவினரும் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் வேறு பல சாதியினராக இருந்தவர்களே!!

இந்த காரைநகர் மணற்காட்டு முத்து மாரியம்மன் கோவில் பிரச்சனை போன்றதே இன்று காரைநகரில் நாம் காணும் இதர சாதிப்பிரச்சனைகளுமாகும் அன்று அறிவுபூர்வமாக ஆராயாமல் தொடரப்பட்ட சாதிய வேறுபாடுகள், பிரிவுகளே இன்று புலம்பெயர் நாட்டினையும் வந்தடைந்தள்ளது. புலம்பெயர் நாடுகளில் எழுகின்ற சாதியப் பிரச்சனையானது, அறிவுரீதியாக முன்னோக்கிப் பார்த்து அவ்வப்போது தீர்வைக்காண தவறும் பட்சத்தில் அப் பிரச்சனையானது தான் பிறந்த ஊரிலிருந்தே சாட்சியங்களை தேடுவது தவிர்க்க முடியாதது.

நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியா வை விட்டு வெளியேறிய இந்தியர்கள் தாம் குடியெர்ந்தநாடுகளான Mauritius, ReUnion, Trinidad போன்றவற்றில் எவ்வாறு இந்த சாதியப் பிரச்சனைகளில் இருந்து விடுபட்டுக் கொண்டார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த சாதிய முறை இந்தியாவில் இன்றுவரை நகர்ப்புறத்திற்கான நகர்வு இல்லாத பிரதேசங்களிலும், ஊர்களிலும் அசையாத ஆலமரமாக உள்ளது.

இலங்கையிலுள்ள சாதிய அமைப்பும் அதன் அகோரமும் இந்தியாவிலுள்ளது போலல்லாது மாற்றத்தை விரும்பும் ஒரு நிலைக்கு அல்லது மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய பக்குவத்தில் இருப்பதும் எம்மால் அவதானிக்கக் கூடிதாக உள்ளது. இக்கால கட்டத்தில் சமூக மாற்றத்தை விரும்புபவர்களும் சமூக முன்னணியாளர்களும் இந்த மாற்றத்தை உண்டு பண்ண செயற்பட வேண்டும், இலங்கையை விட மொறீஸியஸ் நாட்டில் சாதிப்பிரச்சனை மிக குறைந்த நிலையிலும், மொறிஸியஸ் தீவிற்கு அண்மையிலுள்ள ReUnion தீவிலுள்ளவர்கள் இடையே (90 சதவீதமான தமிழர்கள் வாழும் தீவு) சாதிப் பிரச்சனை இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதேபோன்ற நிலைப்பாட்டினை நாம் இலங்கையிலும் உருவாக்க முடியும். இதில் புலம்பெயர் மக்களும் உரிய பங்கெடுத்து செயலாற்ற வேண்டும்.

எமது முன்னோர்கள் சரியாக ஆய்வு செய்து எடுத்துரைக்கப்படாமல் போன இந்த சாதியத்தை நாம் அப்படியே தொடரரும் நிலை மாறவேண்டும்.

- காரை முகுந்தன் -


**லண்டன் தலித் மாநாடு**

16th Feb 2008 - 10:00 - 17:00

17th Feb 2008 - 15:00 - 20:00

Quackers House Bush Road, Wanstead, London, E11 3AU (Nearest Tube: Leytonstone - Central Line (5 min walk) Buses : 257, W19, 145, 66 (Greenman Roundabout)




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேணல் கருணாவிற்கு 9 மாதகால சிறை




விநாயகமூர்த்தி முரளீதரன் என்று அறியப்பட்ட கேணல் கருணாவிற்கு 9 மாதங்கள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. மோசடியாக இராஜதந்திர கடவுச்சீட்டைப் பயன்படுத்தி பிரித்தானியாவுக்கு வந்த குற்றத்தை ஒத்துக் கொண்டமையால் கருணாவிற்கு 12 மாதச் சிறைத் தண்டனையை நீதிபதி மக்டௌஸ் வழங்கினார். ஆனால் கருணா மீதான குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது முதல் 32 தினங்கள் தடுத்து வைக்கப்பட்டது போன்ற காரணங்களை கருத்தில் எடுத்து கருணாவுக்கு 9 மாதங்கள் சிறைத் தண்டனை ஐல்ஸ்வேர்த் கிறவுண் கோட்டில் இன்று (25 ஜனவரி 2008) விதிக்கப்பட்டது.

தண்டனையை வழங்கிய நீதிபதி இவ்வழக்கு அவருடைய கடவுச்சீட்டு மோசடி தொடர்பானது மட்டுமே என்றும் கருணா இதற்கு கூறிய காரணங்கள் உண்மையானதா இல்லையா என்ற சந்தேகத்தையும் அவர் வெளிப்படுத்தினார். நிதிபதி மேலும் குறிப்பிடுகையில் குடிவரவு மற்றும் விடயங்களை உள்துறை அமைச்சு முடிவெடுக்கும் என்றும் தெரிவித்தார். நிதிபதி தண்டனையை வழங்கி தீர்ப்பளிக்கையில் இத்தண்டனைக் காலம் முடிவடையும் போது உள்துறை அமைச்சு சிலசமயம் கருணாவை மேலும் தடுத்து வைக்கலாம் என்பதை கோடிட்டுக் காட்டினார்.

அண்ணளவாக அரை மணிநேரம் இடம்பெற்ற தண்டனை வழங்கல் தொடர்பான விசாரணையின் போது கருணா அரசியல் தஞ்சம் கோரி உள்ளாரா என கருணாவின் சட்டவாதியிடம் கேட்கப்பட்ட போது அவர் தனக்குத் தெரியவில்லை எனப் பதிலளித்தார். ஆனால் நீதிமன்றுக்கு வெளியே றெட்றெஸ் மனித உரிமைகள் அமைப்பின் நிபுணத்துவ ஆலோசகர் கெவின் லுவே இது பற்றிக் குறிப்பிடுகையில் கருணா இதுவரை அரசியல் தஞ்சம்கோரவில்லை என்பதை உறுதிப்படுத்தினர்.

வூம்குரொப்ற் சிறையில் இருந்து நீதிமன்றத்திற்கு பாதுகாப்புடன் கருணா அழைத்துவரப்பட்டார். வழமைக்கு மாறாக நீதிமன்றத்தைச் சுற்றிலும் சீருடையணிந்த பொலிசார் காவலில் நின்றனர். கருணாவுடைய வழக்கு விசாரிக்கப்பட்ட கோட் 3ற்கு முன்பாகவும் பொலிசார் காவலில் நின்றனர். குட்டையாக வெட்டப்பட்ட தலைமயிர். நீதிமன்றத்தில் ஆஸ் நிற சமாந்தர கோடிடப்பட்ட வெள்ளை நிற பெனியனும் கறுப்பு நிற ரவுசரும் அணிந்து வந்த கருணா முகத்தில் எவ்வித சலனமும் இன்றி இறுக்கமாக குற்றவாளிக் கூண்டில் இரு சிறை அதிகாரிகளுக்கு மத்தியில் அமர்ந்திருந்தார்.

கருணா இதுவரை அரசியல் தஞ்சம் கோராத நிலையில் அவருடைய எதிர்காலம் தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே உள்ளது. கொலை, ஆட்கடத்தல், கப்பம், சிறுவர்களை படையில் சேர்த்தல் போனி பல்வேறு மனித விழுமியங்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபட்ட கருணா மீது குற்றச்சாட்டுகளைப் பதிவ




செய்ய தங்களதும் மற்றும் மனித உரிமை அமைப்புகளும் பிரித்தானிய பொலிசாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று றெட்றெஸ் மனிதஉரிமைகள் அமைப்பின் நிபுணத்துவ ஆலோசகர் கெவின் லூவே தேசம்நெற்றிற்குத் தெரிவித்தார்.

பிரித்தானியாவில் பாதிக்கப்பட்டவர்கள் யாராவது இருந்தால் பயங்கரவாதத் தடுப்பு பொலிசாரிற்கு உடனடியாகத் தெரிவிக்கும் படி கேட்டுக்கொண்ட கெவின் லூவே இப்போது கருணாவுக்கு வழங்கப்பட்டு உள்ள தண்டனையால் பொலிசாருக்கு கருணாவின் செயல்கள் பற்றிய ஆதாரங்களைச் சேகரிக்க இன்னும் சில மாதங்கள் அவகாசம் உள்ளது எனத் தெரிவித்தார். தேசம்நெற்றின் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் றெட்றெஸ் அமைப்போ அல்லது ஏனைய மனித உரிமை அமைப்புகளோ பொலிசாரிற்கு உதவ முடியுமே அல்லாமல் கருணாவிற்கு எதிரான வழக்கை மனிதஉரிமை அமைப்புகள் தொடர்வதற்கான வாய்ப்புகள் இல்லையெனத் தெரிவித்தார்.


கருணா விடுதலைப் புலிகளில் இருக்கும் போதும் அவர்களுடனான பிளவுக்குப் பின்னும் குற்றச்செயல்களில் ஈடுபட்டு உள்ளதாகக் குறிப்பிட்ட கெவின் லூவே, கருணாவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தாம் தொடர்ந்தும் பொலிசாருக்கு அழுத்தம் வழங்கி வருவதாகக் குறிப்பிட்டார். பொலிசார் தாங்கள் நிலைமையை அவதானித்து வருவதாக தங்களுக்கு கூறியதாகத் தெரிவித்த கெவின் லுவே பல்வேறு மனித விழுமியங்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபட்ட கருணாவை அவரது விருப்புடனோ அல்லது அவரது விருப்பத்திற்கு மாறாகவோ இலங்கைக்கு அனுப்புவது மிகப்பெரிய ஆபத்து எனத் தெரிவித்தார்.

கருணா அரசியல் தஞ்ச விண்ணப்பத்தை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும் உள்ளது. அவ்வாறு மேற்கொள்ளும் பட்சத்தில் தஞ்ச விண்ணப்பம் பரிசிலிக்கப்பட நீண்டகாலம் ஆகலாம். அல்லாமல் தண்டனைக் காலம் முடிவடைய அவர் மீண்டும் இலங்கைக்கு திரும்பிச் செல்லவும் விரும்பலாம். பிரித்தானிய பொலிசார் கருணாவுக்கு எதிராக மனித விழுமியங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக குற்றப் பத்திரிகையை பதிவு செய்யாதவிடத்து கருணா மீண்டும் வெளியே வருவார். கருணாவின் எதிர்காலம் பற்றிய கேள்விகள் இன்னும் சில மாதங்களுக்கு அவருடைய தண்டனைக்காலம் முடியும் வரை மர்மமாகவெ இருக்கும்.

# இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த பிரித்தானிய பாராளுமன்றத்தில் விவாதம்

ஜனவரி 17, மாலை 5:00 மணிமுதல் மாலை 6:30 மணி வரை பிரித்தானிய பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஒத்தி வைப்பு விவாதத்தின் முடிவிலே யுத்த நிறுத்தத்தை அறிவித்து சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்படி பிரித்தானிய பா உ இலங்கை அரசைக் கேட்டுக்கொண்டனர். □இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு பிரித்தானிய அரசின் உதவி□ என்ற தலைப்பில் இடம்பெற்ற இவ்விவாதத்தில் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த 15 வரையான பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். விவாதத்தின் முடிவில் வெளிவிவகார அலுவலக அமைச்சர் ஹிம் ஹோவ்ஸ் பிரித்தானிய அரசின் நிலைப்பாட்டை அங்கு தெரிவித்தார்.

விவாதத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி அரசாங்கம் ஐ நா மனித உரிமைக் கண்காணிப்பு அலுவலகம் ஒன்றை இலங்கையில் இயங்க அனுமதிப்பதன் மூலமே மனித உரிமைகள் தொடர்பான அரசின் நம்பகத்தன்மையை நிறுவ முடியும் எனத் தெரிவித்தனர். இலங்கை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலத்திக் கொண்டதையிட்டு தமது மனவருத்தத்தை வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு எப்போதும் சாத்தியம் இல்லை என்று ஆணித்தரமாகத் தெரிவித்ததுடன் பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வே சாத்தியம் என்பதை விலியுறுத்தினர்.



விவாதத்தின் நிறைவில் உரையாற்றிய அமைச்சர் ஹிம் ஹோவ்ஸ் (படம்), இலங்கை அரசாங்கமும் எல்ரிரிஈ யும் இராணுவத் தீர்வு நோக்கி நகர்வதை சுட்டிக்காட்டியதுடன், பிரபாகரன் மாவீரர் தினத்தில் தமிழீழத்திற்கு ஆதரவு கோரி போராட அழைப்பு விடத்ததையும் இலங்கை அரசு இராணுவ நடவடிக்கைகளுக்கு அழுத்தம் கொடுத்ததையும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலத்தியதையும் சுட்டிக்காட்டினார்.

மொனராகலையில் இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்பை வன்மையாகக் கண்டித்த அமைச்சர் அரசியல் நோக்கங்களை அடைவதற்கு கொலை செய்வதையும் பயங்கரவாதத்தை கைக்கொள்வதையும் எல்ரிரிஈ கைவிட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

வட அயர்லாந்து போல் சகல சிறுபான்மைச் சமூகங்களும் பிரதிநிதித்துவம் வகிக்கும் வகையில் சாமாதான செயன்முறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அமைச்சர் எல்ரிரிஈ அரசியல் படுகொலைகளை நிறுத்தி பயங்கரவாதத்தை கைவிடுவதாக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இப்பரச்சினைக்கான தீர்வு பற்றிய சுதந்திரமான விவாதத்தை தமிழ் மக்கள் மத்தியில் எல்ரிரிஈ அனுமதிக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டைப் பிரிக்க வேண்டும் என எண்ணுபவர்களுக்கு இலங்கை அரசாங்கம் நம்பிக்கையளிக்கும் வகையில் நடந்துகொள்ள வேண்டும் எனக் கூறிய அமைச்சர் இராணுவத் தீர்வை கைவிட்டு அவர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்தியா - பாகிஸ்தான் பிரிவு, பாகிஸ்தான் - பங்களாதேஸ் பிரிவு இவற்றில் எத்தனை மில்லியன் பேர் கொல்லப்பட்டனர் இலங்கையில் அது நடக்காமல் இருக்க முயற்சிப்போம் என்று தெரிவித்த அமைச்சர் சிலர் இதில் உடன்படாவிட்டாலும் இலங்கைக்குள்ளேயே தீர்வு காண்பதே சாத்தியமானதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

எல்ரிரிஈ தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்திய அமைச்சர் அவர்கள் ஒரு ஜனநாயகச் செயன்முறைக்கு வரவேண்டும் என்றார். எல்ரிரிஈ யும் இலங்கை அரசும் ஆயுதப் பலப்படுத்தலையும் இராணுவ நடவடிக்கைகளையும் கைவிட்டு சமாதானத் தீர்வை நோக்க நகர வேண்டும் என அமைச்சர் அழைப்பு விடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மாத்தையா’ மகிந்த சிந்தனையை உரமிட்டு வளர்க்கும் ‘மல்லி’ பிரபாவின் சிந்தனை?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இன்றைய அரசாங்கம் சுதந்திர இலங்கையை ஆட்சி செய்த மிக மோசமான மிக மோசடியான அரசாங்கம் என்பது தமிழர்களால் மட்டுமல்ல இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மை.

இன்று இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்கள் மத்தியிலும் அரசிற்கு எதிரான உணர்வுகள் மேலோங்கி உள்ளது. இதனை முறியடிக்க அரசு தன்னிடம் உள்ள சகல பலத்தையும் மக்களிற்கு எதிராகத் திருப்பி ஒடுக்குகிறது. தங்கள் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்ய முடியாத மக்கள், தங்கள் நடுத்தர வர்க்க கனவுகளை நிறைவேற்ற முடியாத மக்கள் அரசுக்கு எதிராக வீதியில் இறங்குவது தவிர்க்க முடியாதது. ஆனால் இதற்கு ஒரு பெரும் தடை உள்ளது.

விரும்பியோ விரும்பாமலோ வி.புலிகளே இன்று பெரும்பான்மையான தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கிறார்கள் என்பதே யதார்த்தம். அதனால் வி.புலிகள் எடுக்கின்ற அரசியல், இராணுவ முடிவுகள் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் வாழ்நிலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அந்த வகையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை வாக்களிக்கவிடாது தடுத்ததன் மூலம் விடுதலைப் புலிகள் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆட்சிபீடம் ஏற்றினர் என்பது மறுக்க முடியாத உண்மை. இதற்காக பணப் பெட்டிகள் பரிமாறப்பட்ட செய்திகள், சம்மந்தப்பட்ட நபர்கள் பற்றிய செய்திகளெல்லாம் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்தது.

ஆனால் சிங்கள பாராளுமன்றம் சிங்கள மக்களே ஒற்றையாட்சியை மகிந்த சிந்தனையை ஏற்று மகிந்தவை தங்கள் தலைவனாக தெரிவு செய்ததாக வாதிடுவது உண்மைக்குப் மாறானது. அது சிங்கள தேசம், சிங்களப் பாராளுமன்றம் என்றால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தங்கள் பா உ பதவிகளை தூக்கி எறிந்திருக்க வேண்டும். இன்று அவர்கள் தங்கள் பதவிகளை வைத்திருப்பதன் மூலம் என்ன சாதித்தார்கள்?

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சக டக்ளஸ் தேவானந்தா என தமிழ் பிரதிநிதித்துவத்தையும் பிரதிபலிக்கும் பன்மைத்துவ அரசியல் அரங்காக இலங்கைப் பாராளுமன்றத்தை சர்வதேசத்திற்கு காட்டவே இவர்கள் வழிவகுக்கிறார்கள்.

2007 மாவீரர் தின உரையில் வே பிரபாகரன் □நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம்□ என போர் பிரகடனம் செய்தார். மகிந்த சிந்தனை எதனை விரும்பியதோ அது பிரபாவின் சிந்தனையிலும் எதிரொலித்தது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் மாவீர்ர்தின உரையை வழங்கி 24 மணி நேரத்தில் கொழும்பில் இடம்பெற்ற இரு வேறு குண்டுத் தாக்குதல்களில் 16 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர். மாவீரர் தினத்தன்று இலங்கை விமானப்படையினர் நடத்திய வெவ்வேறு தாக்குதல்களில் புலிகளின் குரல் வானொலி உறுப்பினர்கள் பாடசாலை மாணவிகள் உட்பட 20 பொது மக்கள் கொல்லப்பட்டனர். பிரபாவும் மகிந்தவும் ஒரே மொழியில் பேசினர்.

சந்தர்ப்பம் பார்த்திருந்த இலங்கை அரசு மீண்டும் ஜனவரி 2ல் கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தது. சர்வதேச கண்டனங்களும் அழுத்தங்களும் இலங்கை அரசுக்கு எதிராக குவிய, உத்தியோகபூர்வமாக யுத்த நிறுத்தம் முடிவுக்கு வரும் ஜனவரி 16 அன்று மகிந்த அரசை கைகொடுத்து எழுப்பிவிட்டது மொனராகலையில் நடத்தப்பட்ட பஸ் வண்டி மீதான தாக்குதல்.

இவ்வாறான செயல்களால் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைக் கூர்மைப்படுதி அரசுக்கு எதிரான உணர்வை தமிழ் மக்கள் பக்கம் திசை திருப்பும் மகிந்த சிந்தனையை வி.புலிகள் கச்சிதமாக முடிக்கின்றனர். ஏற்கனவே முஸ்லீம் மக்கள் விடயத்திலும் முஸ்லீம் மக்களை இலங்கை அரசின் பக்கம் தள்ளிவிட்ட கைங்கரியத்தையும் வி.புலிகளே செய்திருந்தனர்.

அரசும் வி.புலிகளும் மனித அவலத்தை ஏற்படுத்துவதில் ஒருவரை ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதையே நிகழ்கால சம்பவங்கள் எடுத்துக்காட்டுகிறது. ஒருவரின் இருத்தலுக்கு மற்றவரின் இருத்தலும் அவசியமாகிறது. மகிந்தவின் சிந்தனையை பிரபா சிந்தனை உரமிட்டு வளர்க்கிறது. இதன் மறுதலையும் உண்மையானதே.

# மலேசியத் தமிழர்களின் இன்றைய போராட்டத்தின் பின் புலம்




1957இன் ஒகஸ்ட் 31இல் மலாயா பிரித்தானிய அரசிடமிருந்து தாமதமாகவே சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது. துணை நிர்வாகிகளாகவும், அரச ஊழியர்களாகவும் இருந்த இலங்கைத் தமிழர்களில் பலர் மலாயன் பென்சனியர்களாக நாடு திரும்பிவிட, எஞ்சியவர்கள் சுதந்திர மலாயாவின் பிரசைகளாகத் தம்மை வரித்துக் கொண்டார்கள்.

தேயிலை, ரப்பர், வெண்பனை (Oil Palm) தோட்டங்களின் பசுமையின் வருவாயில் திளைத்திருந்த பிரித்தானியர்கள் நாட்டைச் சுதேசிகளிடம் கையளித்த போது அங்கிருந்த இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை அந்நாட்டின் பிரசைகளாகவே கருதினார்கள். அங்கிருந்த மலாய்க்காரர்கள், சீனர்கள், இந்தியர்கள் ஆகிய மூவினத்தவர்களிடமும் உரிமைகளைப் பங்கிட்டுவிட்டு வெளியேறிவிட்டார்கள். 1957களில் இம்மூவினத்தவரும் 60:30:10 என்ற விகிதத்தில் இருந்ததாகக் குறிப்புள்ளது. (தென்னிந்திய மற்றும் இலங்கைத் தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், செட்டிகள் என்று ஒரு கலவையாக அங்கு இருந்தவர்கள் அனைவரும் இந்தியர்கள் என்று பொதுவாக அடையாளம் காணப்பட்டார்கள்).

பிரித்தானியர்களின் சம விகிதாசாரமான ஆட்சிப் பங்களிப்பு மலேசியர்களிடையே எடுபடவில்லை. அந்நாட்களில் 30 வீதமாக இருந்த சீனர்கள் மலேசியாவின் பொருளாதாரத்தில் பலம் மிக்க ஆக்க சக்தியாக விளங்கினார்கள். பெரும்பான்மை மலாய்க்காரர்கள் அவர்களிலேயே தங்கியிருந்தார்கள். சிங்கப்பூர் 1965இல் பிரிந்து தனி நாடாக மாறியது. மலாயாவில் இருந்து பிரிக்கப்பட்ட அதன் பொருளாதார வளங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து சென்றன.

இந்நிலையில் 1969இல் மலாயாப் பெருநிலத்தின் ஆளும்கட்சி ஆட்சியிலிருந்து படுதோல்வியுடன் அகற்றப்பட்டது. இதற்குச் சீனர்களையும், இந்தியர்களையுமே மலாயா அரசு காரணிகளாக்கியது. அதன் முடிவு, பாரிய இனக்கலவரமாக வெடித்தது. தமது நாட்டிலேயே தாம் சுரண்டப்படுவதாக உணர்ந்த மலாய்க்காரர்கள் தோல்வியுற்ற ஆட்சியினரால் சிறுபான்மையினர் மீது ஏவிவிடப்பட்டார்கள்.

இனக் கலவரத்தின் முடிவு அக்கட்சிக்கு மீண்டும் வெற்றியைத் தந்தது. மீண்டும் கலவரத்தின் பின் ஆட்சிக்கு வந்த அந்த மலாய்ப் பெரும்பான்மை அரசு மலாய்க்காரருக்கு நன்றிக் கடனாக புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. பின்தங்கியுள்ள மலாய்க்காரர்கள் பொருளாதார முன்னேற்றம் காணவேண்டும். அப்பொழுது தான் சிறுபான்மையினருடன் சம உரிமையுடன் வாழ முடியும் என்று கூறி, பூமிபுத்திரர்களாக மகுடம் சூட்டி அவர்களுக்குப் பல வழிகளிலும் முன்னுரிமை வழங்கலாயிற்று.

புதிய சட்டத்தின்படி 1970 முதல் தொடரும் 20 ஆண்டுகளுக்கு மலாய்காரர்களுக்கு 30 சதவீதம் அனைத்து வாய்ப்புகளிலும் மற்றவர்களைவிட அதிகபட்ச முன்னுரிமை வழங்கப்படும். இருபது ஆண்டுகளில் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் நிறுத்தப்படும். அதற்கிடையில் மலாய்க்காரர்கள் தம்மைச் சுதாரித்துக் கொள்ள வேண்டும் இதுவே அச்சட்டம்.

இந்தியர்களும், சீனர்களும் இச்சட்டத்திற்குத் தலையசைத்தார்கள். பெரும்பான்மை இந்தியர்கள் மீண்டும் தமது தோட்டப்புற வாழ்க்கைக்குள் மூழ்கிவிட சிறுபான்மையினர், புதிய சுதந்திரத்தின் அனுகூலங்களுக்குள் தமது வசதிகளை வளங்களை நிலைநிறுத்திக் கொள்ள முனைந்தார்கள். இந்நிலையில் மலேசிய இந்திய காங்கிரஸ் என்ற அரசியல் கட்சி படிப்படியாகத் தலையெடுத்து உறங்கு நிலைக்குச் சென்றுவிட்ட இந்தியர்களின் ஏகப்பிரதிநிதியாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டு மலேசிய அரசாங்கத்திலும் இடம்பிடித்து விட்டது. இந்தியர்களின் உறக்கம் கலையாமல் அவதானமாகத் தமது காய்களை நகர்த்திக் கொண்டு ஏகபோக அரசியல் லாபம் ஈட்டிக்கொண்டு வந்தது. சாமிவேலு என்ற இந்தியர் அவர்களுக்குத் தலைவரானார். தமிழ் ஊடகங்களும் அவர்களது கட்டுப்பாட்டில் பெருமளவு தங்கி இருந்தது. பெரும்பான்மை இந்தியர்களின் ஏழ்மையும், கல்வி வசதிக் குறைபாடும் எதிர்ப்பியக்கம் ஒன்றை அவர்களிடையே நீண்டகாலம் உருவாக்கவில்லை.

சீனர்களோ தமது காலில் தாம் ஊன்றித் தமது பொருளாதாரத்தை மேலும் வளப்படுத்தித் தமது இருப்பினை ஸ்திரப்படுத்திக் கொண்டார்கள். அவர்களது நிலைப்பாடு சாதுர்யமாக தமது இனத்தின் பொருளாதார கல்வி வளர்ச்சியை மையப்படுத்தியதாக வளர்ந்தது. தமது சமூகத்திற்கான அடிப்படை முதலீடுகளை அரசின் உதவியின்றியே அவர்களால் கூட்டுறவு முறையில் எற்படுத்திக்கொள்ள முடிந்தது.

20 ஆண்டுகள் 1990இல் முடிந்தாலும், மலாய்க்காரர்களுக்கான 30 வீத மேலதிக சலுகை வாய்ப்பு வழங்கல் நிறுத்தப்பட வில்லை. 30 வீதம் காலக்கிரமத்தில் பல துறைகளில் 50 வீதமாகிவிட்டதை திடீரென உறங்கு நிலையில் இருந்து விழித்துக்கொண்ட இந்தியர்களில் ஒரு சிலர் புரிந்துகொண்டார்கள்.

அண்டை நாடான இலங்கையில் படிமுறை வளர்ச்சிபெற்ற இனவாத ஒடுக்குமுறைகளையும், அங்கு எழுச்சிபெற்ற விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியயும் நன்கு அறிந்தவர்களாகவே இவர்களில் பலர் இருந்து வந்துள்ளனர். ஈழத்தமிழரின் வெளிப்படையான அனுதாபிகளாகவும் மலேசியத் தமிழர்கள் நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளனர்.

இந்நிலையில் ஈழத்தமிழரின் போராட்ட உணர்வு மலேசியத் தமிழர்களுக்குத் தொற்றிவிடக்கூடாது என்பதில் மலேசிய அரசு வெகு எச்சரிக்கையுடனேயே அங்கு இருந்து வந்துள்ளது. தமிழ் ஊடகங்களை மிகுந்த எச்சரிக்கையுடனேயே அரசும் அதன் சார்பான அரசியல் கட்சிகளும் கவனித்து வந்தன.

இப்பின்புலத்துடன் மலேசிய அரசு தனது ஒடுக்குமுறைக் கரங்களை மேலும் மேலும் அழுத்திய போதே அதனை பொறுத்துக்கொள்ள இயலாது மலேசியத் தமிழர்கள் பொங்கி எழுந்தனர்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் ஒருக்கா திங் பண்ணுங்கோ

**பேராசிரியர் பெக்கோ**

## மீண்டும் அவதூறு ஆசாமி டாக்டர் ம(இ)ந்திரகுமார்:

மொட்டைக் கடிதம் அனுப்புதல், பாலியல் சஞ்சிகைகளில் வெளியாகும் ஆபாசப் படங்களை வெட்டி தன்னை எதிர்க்கும் (தன் மனைவி (ex) உட்பட) பெண்களுக்கு தபாலில் அனுப்பி வைத்தல், மற்றும் முகம் தெரியாமல் இவ்வாறான அடாவடித்தனங்களில் பல காலமாக ஈடுபட்டு வந்த டாக்டர் ம(இ)ந்திரகுமார் மீண்டும் சீனில் இறங்கியுள்ளார். சில ஆண்டுகளுக்கு முன் ஜெயதேவனால் புலிகளுக்கு சார்பாக வெளியிடப்பட்ட விடுதலை பத்திரிகையின் முகமில்லாத ஆசிரியர் இந்த ம(இ)ந்திரகுமார் தான். இவருக்கு சம்பளம் ஒரு போத்தல் ஜொனிவாக்கர் என்பது பலரின் பணிவான கருத்து. ஜெயதேவன் புலிகளால் கைது செய்யப்பட்டவுடன் ஜொனிவாக்கர் கொஞ்ச காலம் தலைமறைவானார்.

தற்போது இவர் லண்டனில் வெளியாகும் காலைக்கதிர் என்ற பத்திரிகையில் “ஏழ்பனை நாடான்“ என்ற புனைபெயரில் ஒழிந்துகொண்டு ஆசிரியராக கடமை யாற்றுகிறார். இந்த வேலைக்கு திருலிங்க நாதன் எத்தனை போத்தல் கொடுக்கிறார் என்று தெரியவில்லை. இதைத் தவிர ராதா என்பவர் (Capital Autos) தயாரிக்கும் சித்திரா என்ற சின்னத்திரை நாடகத்திலும் இந்த ஆசாமி டாக்டர் டாக்டராக நடிக்கிறார்.

எங்கட ராதா அண்ணைக்கு அல்லது சித்திராவில் ஈடுபடும் கலைஞர்களின் வீட்டுக்கு ஏதும் ஆபாசப் படங்கள் தபாலில் வந்தால் அதை யார் அனுப்பி இருப்பார்கள் என்று யோசித்து மண்டையை உடைக்க வேண்டாம். எங்கு கூட ஊத்துகிறார்களோ அங்கெல்லாம் போவார் டாக்டர். எதற்கும் திருலிங்கநாதனும் ராதா அண்ணனும் உஷாராக இருப்பது நல்லது. முடிந்தால் நிறம்ப ஊத்திக் கொடுங்கள் டாக்டர் உங்களுடனேயே இருந்து மேலும் 4 பக்கத்தில் இலவசமாக விளம்பரம் போடுவார்.............. cheers டாக்டர்.................. என்ஜோய்!!

## உலகத் தமிழர்களின் கற்கால தொலைக்காட்சி தீபம்:

கொத்தடிமை, உழைப்பு, ஊதிய மில்லாத வேலை.............. இவையெல்லாம் இங்கிலாந்தில் மலையேறி விட்டதாக யாரும் தப்புக்கணக்கு போட வேண்டாம். தீபம் தொலைக்காட்சி என்ற பெயரில் அது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. தொழிலாளர்களை (கலைஞர்களை) work permit இல் வரவழைப்பது, பின்னர் விடுமுறை, ஓய்வு கொடுக்காமல் புளிந்தெடுப்பது எல்லாம் தீபத்தில் சகஜம். மூச்சு............. யாரும் வாயைத் திறந்தால்................ OUT. இடையிடையே புலிக்கும் மைலேஜ் செய்வதால் safe ஆக இருக்கிறார்கள். எப்போது நாறுமோ தெரியாது. சக்கரையில்லாத இல்லாத ஊருக்கு இலப்பம் பூ சக்கரை என்பது போல தற்போது தீபம் கொடிகட்டி பறக்கிறது. என்ஜோய்......... என்ஜோய்..........

## சிதம்பரப்பிள்ளை ஐயாவா கொக்காவா?

சிதம்பரப்பிள்ளை ஐயா எந்தப் பிரச்சனையை எடுத்தாலும் கொலை விழுந்தாலும் எதிர்க்கட்சிக்குப் போகவே மாட்டார். அது TRAG ஆக இருந்தால் என்ன, ஆச்வே முருகன் ஆலயமாக இருந்தால் தான் என்ன. நல்லவன் பெரியவன் மாதிரி இடையால சைக்கிள் ஓடி பிறகு தலைமை பக்கம் உறுதியாக சாய்ந்துவிடுவார். ஐயாவின் இந்த ஸ்ரைல் தான் எல்லா இடங்களிலும் அவரை தலைவராக உயர்த்தி உள்ளது. ஆனால்............ ஆனால்............ ஈஸ்ற்ஹாம் மகா லக்ஷ்மி கோயில் விவகாரத்தில் மட்டும் ஐயா எதிர்க் கட்சியில் இருக்கிறார்......... ஏன்??? (flash back)

ஸ்...........உஸ்...........டிங்............. டிங்....... டிங்...... (flash back) இன்றுபோல் பல வருடங்களுக்கு முன்பும் ஐயா ஒரு பெரிய பிரமுகர் தான். ஐயாவுக்கு ஒவ்வொரு நாளும் பிறந்தநாள், சாமத்தியம், திருவிழா, ....... அழைப்புகள் இருக்கும். அழைப்பு விடுத்த எல்லா இடத்திற்கும் போய் ஐயா ஈஸ்ற்ஹாம் ஆலயத்துக்கு தினசரி தரிசனத்துக்கு வர சாமமாகிவிடும். எங்கட சிதம்பரப்பிள்ளை ஐயா வரும் மட்டும் ஈஸ்ற்ஹாம் முருகன், பிள்ளையார் உட்பட எல்லாரும் waiting. எங்கட ஐயா இல்லாமல் பிரபல சின்னத்திரை நடிகர் ஐயா நாகநாதக் குருக்கள் ஐயா பூசை தொடங்கமாட்டார். (சிதம்பரப்பிள்ளை ஐயா வராமல் என்னய்யா உங்களுக்கு பூசை வேண்டிக்கிடக்கு. முருகனுக்கு bed time போனாலும் பரவாயில்லை, எங்கட ஐயா வர வேணும்...................

சிதம்பரப்பிள்ளை ஐயாவின் அதிகாரம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த வேளை செயற்குழு தலைவராக வந்தார் டாக்டர் அழகராஜா (நம்பியார்) அவர்கள். அவர் தெட்டத்தெளிவாக உத்தரவு போட்டார், “யார் வருகிறார்களோ இல்லையோ கடைசி பூசை 8 மணிக்கு தொடங்க வேண்டும்” என்று. அவ்வளவு தான் பாவம் நம்மட நாகநாதக் குருக்கள் என்ன தான் செய்வார், (அன்று குருக்கள் இப்போது மாதிரி famoues இல்லை) பூசை நேரத்திற்கு தொடங்கி ஒழுங்காக நடந்தது.

இந்தக் கறளைத்தான் இப்போது சிதம்பரப்பிள்ளை ஐயா மகாலக்ஷ்மி கோயில் ஊடாக தீர்த்துக் கொள்கிறார் ஆக்கும்.

வாழ்க தமிழ்! வளர்க சைவ நீதி!! இன்னும் பெருகுக உங்கள் தலைவர் பதவிகள்!!!

## காணவில்லை!!! லண்டன் நாயன்மார்கள் எங்கே???

ஈழத்தமிழர்களில் லண்டன் காவல் தூண்கள் புலவர் ராஜமனோகரன், தியாகச் செம்மல் இடைக்காடர், மன்மதன் சீவரத்தினம் ஐயா எல்லோரும் எங்கே? summer holiday இற்கு காசி, கன்னியாபுரம் போய் விட்டார்களோ? கண்டால் தயவு செய்து பேராசிரியர் பெக்கோவுடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கூறவும். தொடர்ந்து காணாமல் போனால் 999 உடன் தொடர்பு. இவர்கள் இல்லாமல் லண்டனில் பத்திரிகைகளை நிரப்புவது கஷ்டமாக இருக்கிறது. we are missing them.

வேறயென்ன அடுத்தமுறை சந்திப்பம். உங்களுக்கு காதோடு ஏதாவது கிடைச்சா எங்களுக்கும் ஒரு எட்டுவந்து சொல்லிட்டுப் பொங்கோ இந்த போக்கவரத்துகள் சனத்துக்கும் தெரியத்தானே வேணும்.

வோல்தம்ஸரோ கற்பக விநாயகர் ஆலயம்
2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX Tel: 020 8527 3819

விசேட தினங்கள்

வசந்த நவராத்திரி அலங்காரத் திருவிழா 06 ஏப்ரல் 2008

தேர் 14 ஏப்ரல் 2008 திங்கட் கிழமை மாலை 7.00 – 9.00 மணி

மாதாந்த காயத்திரி அம்மன் வழிபாடு

காயத்திரி யாக வழிபாடு ஞாயிற்றுக் கிழமைகளில்

09 மார்ச் 2008


27 ஏப்ரல் 2008

18 மே 2008

8 யூன் 2008

காலை 10 மணிக்கு விசேட அபிஷேகத்தைத்

தொடர்ந்து விசேட பூசை 108 காயத்திரி ஜப சமர்ப்பணம், திருவீதியுலா.



மங்கள நிகழ்ச்சிகளுக்கு மேளம் நாதஸ்வரம் ஏற்பாடு செய்து தரப்படும்.

உண்மைகள் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org